(இ) 1980-81 கல்வி ஆண்டு முதல் அங்கீகாரம் மீண்டும் வழங்கப்பட்டது.

(ஈ) ஒன்பது ஆசிரியர்கள் வேலை பார்க்கிறார்கள்.

(உ) 238 மாணவர்கள் படிக்கின்றனர்.

(முற்பகல் 9-30)

திரு. எஸ். என். இராமசாமி: தலைவர் அவர்களே, பேயன் விளை இந்து ஆரம்பப் பள்ளியில் ஒன்பது ஆசிரியர்கள் பணி புரிந்தாலும்கூட அங்கே பணிபுரிகின்ற மூன்று ஆசிரியர்களுக்கு இரண்டு ஆண்டுகளாகச் சம்பளம் வழங்கப்படாமல் இருக்கிறது. சம்பளம் கிடைக்காத அந்த ஆசிரியர்கள் சம்பளம் பெறுவதற்கான ஏற்பாடுகளை அரசு உடனே செய்ய முன்வருமா?

மாண்புகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நாங்கள் எவ்வளவு இடங்களைத் தருகிறோமோ அந்த இடங்களிலே ஆசிரியர்களை நியமிக்கிறபோது அதற்கான சம்பளத்தை மட்டும் கொடுப்பதற்கான பொறுப்பைத்தான் அரசு ஏற்றுக் கொள்கிறது. அதை மீறி அவர்கள் ஆசிரியர்களை நியமித்துக் கொண்டால் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டியது அந்த நிர்வாகத்தினுடைய பொறுப்பு, அந்த ஆசிரியர்களுடைய பொறுப்பு. சட்டமன்றத்திலே நாம் ஆண்டுதோறும் அனுமதிக்கின்ற இடங்களைப் பல்வேறு மாவட்டங்களுக்கும் பகிர்ந்து அளிக்கிறோம். அந்த முறையிலே 1,2 இடங்களுக்குத்தான் தர முடியுமே தவிர, அவர்கள் நியமித்துக் கொண்ட ஆசிரியர்களுக்கு எல்லாம் நாம் சம்பளம் தரமுடியாது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பள்ளிகளில் புவியியல் பாடம் கற்பிக்க நியமிக்கப்படும் ஆசிரியர்கள்.

* வினா எண் 28— திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் புவியியல் (Gecgraphy) பாடம் கற்பிக்க புவியியல் படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களையே நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உயர்நிலைப்பள்ளிகளில் புவியியல் பாடம் தனிப்பாடமாக வைக்கப்படாமல் வரலாறு பாடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே இப்பாடத்திற்கு ஒரு ஆசிரியர்தான் நியமனம் செய்யலாம். அவர் பட்டப்படிப்பில் வரலாறு அல்லது புவியியல் படித்திருக்க வேண்டும்.

1982 செப்டம்பர் 8]

மேல்நிலை வகுப்புகளில், புவியியல் போதிக்க முதுகலைப் பட்டம் பெற்றவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்ற விதி உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலே இம் மாதிரியான பாடங்களுக்கான ஆசிரியர்களை நியமிக்கிறபோது அந்த அந்தப் பாடங்களிலே தேர்ச்சி பெற்றவர்களைத்தான் நியமனம் செய்கின்ற பழக்கம் இருந்து வருகிறது. அப்படியிருக்கிற போது, இப்போது புவியியல் பாடத்திலே தேர்ச்சி பெற்றவர்கள் நிறையப் பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே வருகின்ற காலத்திலே அந்த ஆசிரியர்களை நிறைய எடுத்துக் கொள்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, புவியியல் பட்டதாரிகளை நாம் எடுப்பதில்லை என்பது நம்முடைய நிலையாக இப்போது இல்லை. வரலாறு, புவியியல் இரண்டு பாடங்களுக்கும் ஒரு ஆசிரியரைப் போடுகிறோம். அவர் வரலாறு படித்தவராக இருக்கலாம் அல்லது புவியியல் படித்தவராக இருக்கலாம். ஆனால் புவியியல் படித்த பட்டதாரிகள்தான் புவியியலைச் சொல்லித்தர வேண்டுமென்பது சரியான கருத்து. அந்தக் கருத்தை நாம் ஆதரிக்கின்ற முறையிலே தான் மேல்நிலைப் பள்ளிகளிலே புவியியல் பட்டதாரிகளை எடுக்கவேண்டுமென்று வைத்திருக்கிறோம். இதுபற்றிய யோசனைகளை நாம் செய்து கொண்டிருக்கிறோம். புதிதாக ஏற்படுகின்ற மாற்றத்திற்கு ஏற்ப பொருளாதாரத்தை 10 வது வகுப்பு வரையிலே வைக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே காலத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏற்றபடி பாடங்களைத் திருத்தியமைக்கிறபோது இதுபோன்ற கருத்துக்களைப் பரிசீலிப்போம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, உயர் நிலைப்பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிக்கின்ற பணி ஒவ்வோர் ஆண்டும் மிகக் காலதாமதமாகவே செய்யப்படுகிறது. மாவட்டத்திலே உள்ள சி. இ. ஒ தேர்ந்தெடுத்து இங்கே வந்து அவர்கள் நியமிக்கப்படுவதிலே கால தாமதம் ஏற்படுகிறது. இந்தக் கால தாமதத்தைத் தவிர்ப்பதற்காக நியமனங்களை அவர்களே செய்து கொள்ளக்கூடிய முறையில் அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, சில குறிப்பிட்ட நிலைகளிலே உள்ள ஆசிரியர்களை இங்கே நாம் தேர்வு செய்கிறோம். அது மாநில அளவு தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற காரணத்தினால் அந்த முறையை வைத்துக் கொண்டிருக்கிறோம். மற்றபடி ஆசிரியர்களை அந்த டி. இ.ஒ., சி. இ. ஒ., நிலையிலேயே தேர்ந்தெடுக்கின்ற முறையைத்தான் நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். இராசாராமன் : தலைவர் அவர்களே, வரலாறு படித்தவர்களுக்கு இப்போது புதிதாகப் படித்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறது, அதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு படித்தவர்கள் உயர்நிலைப்பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்கள் பலபேர் அதிலே பட்டம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் புரொமோஷன் என்கிற முறையில் வருகிற காரணத்தால் வெளியே தனியாகக் கல்லூரிகளில் படித்து பட்டம் பெற்றவர்களுக்குப் போதுமான வேலை கிடைக்காமல் இருக்கிறது. இது வரலாறு படித்தவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ் படித்தவர்களுக்கும் இந்தப் பாதகமான நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதை ஓரளவிற்குத் தீர்ப்பதற்கு அரசு சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பாளையங்கோட்டையிலுள்ள நீதிமன்றங்களுக்கான கட்டிடங்கள் கட்டும் திட்டம்.

*வினா எண் 29—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகுகூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையிலுள்ள உரிமையியல் நீதிமன்றத்திற்கும், குற்றவியல் நீதி மன்றத்திற்கும் தனித்தனி கட்டிடங்கள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

(இ) மதிப்பீடு எவ்வளவு?

(ஈ) எந்த இடத்தில் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இ மற்றும் (ஈ) திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரி ஹைகிரவண்ட்ஸ் மனை வளாகத்தில் ரூ. 54,00,000 மதிப்பீட்டுச் செலவில் சிவில் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்குத்தனித்தனியாகக் கட்டிடம் கட்டுவதற்கான உள் துறை ஆணை 582 எண்ணும் 16-3-81 நாளிட்ட அரசாணையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடங்கள் எவ்வளவு காலத்தில் கட்டி முடிக்கப் பெறும்? இவைகளில் வழக்குரைஞர்களுக்கென்று தனியாக சேம்பர் கட்டித் தருகிற உத்தேசம் இருக்கிறதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS